**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருநெல்வேலி**

முன்னிலை : **திரு.R.M.மாரிமுத்து, B.A., B.L., L.L.M.,**

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,

திருநெல்வேலி

2025 ம் ஆண்டு அக்டோபர் மாதம் 27 ம் நாள் திங்கட்கிழமை

**இ.பி.எண்.41/2025 அதன் அ.வ.எண்.259/2022**

1) மாலையம்மாள்
2) முருகன் .... மனுதாரர்கள்/வாதிகள்

/எதிர்/

செல்லையா .... எதிர்மனுதாரர்/பிரதிவாதி

இந்த மனுவானது 24.10.2025 அன்று இந்நீதிமன்றத்தின் முன்பு இறுதியாக விசாரணைக்கு வந்த போது, மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.V.சிவசங்கரன் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.M.ராஜு அவர்கள் ஆஜராகியும், இரு தரப்பு வாதங்களைக் கேட்டும் மற்றும் ஆவணங்களை பரிசீலனை செய்தும் இன்று வரை இந்நீதிமன்ற ஆய்விலிருந்தும் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்....

**உத்தரவு**

1). நிறைவேற்றுதல் மனுவானது உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 21 விதி 35 –ன் கீழ் மனுதாரர்களால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2) மனுவின் சுருக்கம்**

மனுவில் எதிர்மனுதாரர்கள் மீது சுவாதீன பரிகாரம் கோரி முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருநெல்வேலியில் அ.வ.எண்.259/2022 என்ற வழக்கு தாக்கல் செய்து, மேற்படி வழக்கானது விசாரணைக்கு பின்பு 07.02.2025 ம் தேதி தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றும், எனவே, மேற்படி தீர்ப்புரை மற்றும் தீர்ப்பாணையின் அடிப்படையில்

நிறைவேறுதல் மனு தபசில் சொத்திலிருந்து எதிர்மனுதாரரை காலி செய்து அப்புறப்படுத்தி வாழ்விப்பு செய்து கட்டிடத்தை மனுதாரர்கள் வசம் ஒப்படைக்க உத்தரவிட வேண்டி மனுதாரர்கள் இம்மனுவை தாக்கல் செய்துள்ளார்கள்.

3) **<u>எதிருரை சுருக்கம்</u>**

3.1) மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள மனுவானது சட்டப்படியும், நியாயப்படியும் நிலைக்கத்தக்கதல்ல என்றும், மனுதாரர் மனுவில் கூறியுள்ள சங்கதிகள் அனைத்தும் பொய்யானது என்றும், அசல் வழக்கில் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பாணையை எதிர்த்து எதிர்மனுதாரர் திருநெல்வேலி மாண்புமிகு முதன்மை மாவட்ட நீதிமன்றத்தில் மேல்முறையீடு தாக்கல் செய்துள்ளார் என்றும், மேற்படி மேல்முறையீட்டு மனுவினை தாக்கல் செய்ய ஏற்பட்ட காலதாமதத்தை மன்னிக்க கோரியும், மேற்படி நிறைவேற்றுதல் மனுவினை நிறுத்தி வைக்கக் கோரியும் மனு தாக்கல் செய்துள்ளார் என்றும், மேற்படி மேல்முறையீடு வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட காலதாமத மனுவிற்கு இடைக்கால மனு எண். இ.ம.எண்.1/2025 இன் எண் இடப்படாத மேல்முறையீட்டு எண் வழங்கப்பட்டு, மேற்படி மனுவில் மனுதாரர்கள் ஆஜராவதற்காக 21.11.2025ம் தேதி வாய்தா போடப்பட்டுள்ளது என்றும், மேற்படி மேல்முறையீட்டில் எதிர்மனுதாரருக்கு நல்ல கட்சி உள்ளது என்றும், எனவே, இம்மனுவை தள்ளுபடி செய்ய வேண்டுமென கூறப்பட்டுள்ளது.

4). இரு தரப்பிலும் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்கள் எதுவும் முன்னிறுத்தவில்லை.

5). **<u>இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில் இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதேயாகும்.</u>**

6). இரு தரப்பு வாதுரை கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டன. மனுதாரர் தரப்பில், அசல் வழக்கானது சுவாதீனப் பரிகாரம் கோரி எதிர்மனுதாரருக்கு எதிராக அ.வ.எண்.259/2022 தாக்கல் செய்யப்பட்டு, அதில்

கடந்த 07.02.2025ம் தேதி மனுதாரருக்கு ஆதரவாக தீர்ப்புரை மற்றும் தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது என்பது தெரிய வருகிறது.

7) இந்த மனுதாரர் தாக்கல் செய்த அ.வ.எண்.259/2022 என்ற வழக்கில் கடந்த 07.02.2025-ல் தீர்ப்புரை மற்றும் தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது என்பது இரு தரப்பிலும் ஒத்துக் கொள்ளப்பட்டுள்ளது. இந்நிலையில், மேற்படி மனு சங்கதிகளை மறுத்து எதிர்மனுதாரர் ஆட்சேபணை தெரிவித்து எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில், அதற்கான ஆவணங்கள் எதுவும் இந்நீதிமன்றத்தில் அவர்கள் தரப்பில் குறியீடு செய்யவில்லை. மேலும், நிறைவேற்றுதல் மனுவை மேல் நடத்த தடையாணை எதுவும் மேல்முறையீட்டு நீதிமன்றங்களால் பிறப்பிக்கப்படவில்லை என மனுதாரர் தரப்பில் கூறப்பட்டுள்ளது.

8) எனவே, நிறைவேற்றுதல் நீதிமன்றமான இந்நீதிமன்றத்திற்கு மேல்முறையீட்டு நீதிமன்றங்களால் அசல் வழக்கில் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பாணையை நிறைவேற்ற எந்தவிதமான தடையாணை பிறப்பிக்கப்படாத நிலையிலும், நிறைவேற்றுதல் நீதிமன்றமான இந்நீதிமன்றம் அ.வ.எண்.259/2022 வழக்கில் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பாணைக்கு இணங்க மனு தபசில் சொத்தினை மனுதாரரிடம் மீட்டுக் கொடுக்க வேண்டிய பொறுப்பு இந்த நீதிமன்றத்திற்கு உள்ளது. மனுதாரர்/வாதி நீதிமன்றத்தில் ரூ.30,000/- வைப்பீடு செய்துள்ளார். மேற்படி தொகையை எதிர்மனுதாரர்/பிரதிவாதி மனு செய்து பெற்றுக் கொள்ளலாம். ஆனால், தற்போது வரை எதிர்மனுதாரர் மேற்படி தொகையை பெற்றுக் கொள்ள எந்த மனுவும் தாக்கல் செய்யவில்லை. எனவே, நிறைவேறுதல் மனு தபசில் சொத்திலிருந்து எதிர்மனுதாரரை அப்புறப்படுத்தி வாழ்விப்பு செய்து கட்டிடத்தின் சுவாதீனத்தை மனுதாரரிடம் ஒப்படைவு செய்து கொடுப்பது தான் நீதியின் நலனுக்கும் உகந்ததாக இருக்கும் என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

***இறுதியில், இம்மனு செலவு தொகையுடன் அனுமதிக்கப்படுகிறது.*** **Delivery Batta in 3 days. Delivery on or before 14.11.2025*****. Call on 17.11.2025.***

என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு, அவரால் எழுதப்பட்டு, விரிவாக்கம் செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, 2025 ம் ஆண்டு அக்டோபர் திங்கள் 27 ம் நாளாகிய இன்று என்னால் திறந்த இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

MARIMUTHU R MUNIYASAMY

order uploaded on 27.10.2025.
Digitally signed by MARIMUTHU R MUNIYASAMY
Date: 2025.10.27 18:22:38 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருநெல்வேலி.

1). மனுதாரர் தரப்பு சாட்சிகள் சான்றாவணங்கள் : இல்லை
2). எதிர்மனுதாரர் தரப்பு சாட்சிகள் சான்றாவணங்கள் : இல்லை

MARIMUTHU R MUNIYASAMY

order uploaded on 27.10.2025.
Digitally signed by MARIMUTHU R MUNIYASAMY
Date: 2025.10.27 18:22:44 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருநெல்வேலி.

மு.மா.உ.நீ, திருநெல்வேலி.
இ.பி.எண்.41/2025
அதன்
அ.வ.எண்.259/2022
வரைவு/சீரான உத்தரவு
நாள் –27.10.2025.